# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 07 | புவியியல் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1 - 10 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. மத்தியகோட்டின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் 231/2$^{0}$ கோடு,
    1. மத்தியகோடு 2. மகரக்கோடு 3. கடகக்கோடு 4. ஆட்டிக்வட்டம்

02. புவிமேற்பரப்பின் பரப்பளவு எத்தனை மில்லியன் சதுரகிலோமீற்றர்?
    1. 410 2. 420 3. 510 4. 520

03. இலங்கையின் அகலம் கொழும்பிலிருந்து சங்கமன்கந்தமுனை வரை எத்தனை கிலோமீற்றர்?
    1. 432km 2. 232km 3. 241km 4. 223km

04. இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகளில் உள்ளகச் சமவெளி எத்தனை மீற்றர், பகுதிகளுக்கு இடையில் காணப்படுகின்றது.
    1. 30mக்கு குறைவான பகுதியில் 3. 300m - 600mக்கு இடையிலான பகுதியில்
    2. 300mக்கு மேற்பட்ட பகுதியில் 4. 30m - 300mக்கு இடையிலான பகுதியில்

05. இலங்கையின் நீர்வள நாகரிகம் ஆரம்பித்த பிரதேசமாக பின்வரும் எவ்வலயம் அறிமுகம் செய்யப்படுகின்றது?
    1. உலர்வலயம் 2. ஈரவலயம் 3. மத்தியமலைநாடு 4. கரையோர வலயம்

06. இலங்கையில் தென்மேல் பருவக்காற்றினால் மழைவீழ்ச்சி கிடைக்கும் காலங்கள்,
    1. ஒக்டோபர், நவம்பர் , டிசம்பர் 2. மே, ஜூன், ஜூலை
    3. நவம்பர், டிசம்பர், ஜனவரி 4. மார்ச், ஏப்ரல், ஒக்டோபர்

07. இந்து சமுத்திரத்தில் காணப்படும் தீவுகளில் ஒன்று,
    1. கியூபா 2. ஜப்பான் 3. கிறீன்லாந்து 4. மடகஸ்கார்

08. தென்னாசிய நாடுகளில் எழுத்தறிவு வீதம் அதிகரித்துள்ள நாடு,
    1. பூட்டான் 2. இந்தியா 3. பாகிஸ்தான் 4. மாலைதீவு

09. இலங்கையில் காணப்படும் தீவுகளில் ஒன்று,
    1. நெடுந்தீவு 2. தாய்வான் 3. மடகஸ்கார் 4. யாவா

10. இலங்கையின் இடவிளக்கப்படத்தினை தயாரித்த திணைக்களம் எது?
    1. நீர்ப்பாசன திணைக்களம் 3. இலங்கை நில அளவைத் திணைக்களம்
    2. கமநலசேவை திணைக்களம் 4. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



kalvi.lk

**11 - 15 வரையான வினாக்களுக்கு சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

11. இலங்கையில் வரட்சியால் பாதிக்கப்படும் மாவட்டம் மாத்தளையாகும். ( )

12. இடவிளக்கப்படங்களை வாசிப்பதற்கு அவசியமானதில் குறியீட்டு விளக்கம் முக்கியமானது. ( )

13. கரீபியன் கடல் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. ( )

14. இலங்கையின் கரையோரச் சமவெளியில் எச்சக்குன்றுகள் பாறைத்தொடர்கள் அதிகம் அமைந்துள்ளன. ( )

15. இலங்கையில் சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்துள்ளது. ( )

**16 - 20 வரையான வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் சரியான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

16. இலங்கையில் நிலச்சரிவு ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கையான காரணிகள் .................................................. ஒன்றாகும்.

17. நாட்டின் உட்பகுதியில் அமைந்துள்ள கடல் ........................................ ஆகும்.

18. காலநிலை மாற்றங்கள் நிகழ்வதற்கான காரணம் ........................................ ஆகும்.

19. இலங்கை வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணம் .............................................ஆகும்.

20. சமுத்திரங்களுடன் இணைந்து காணப்படும் கடல் ...................................... ஆகும்.

(வளிமண்டலம் வெப்பமடைதல் / பால்டிக்கடல் / செங்குத்தான சாய்வு நிலம் / கஸ்பியன் கடல் / தாழ் நிலங்களை நிரப்புதல்)


(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி -II

முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.a. தரப்பட்டுள்ள உலகப் புறஉருவப்படத்தில் குறிக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை படத்தில் எழுதுக.

i. ஐஸ்லாந்து ii. அத்திலாந்திக் சமுத்திரம் iii. அரபிக்கடல் iv. வடஅமெரிக்கா
v. நியூசிலாந்து vi. கியூபா (6x1 =6புள்ளிகள்)







kalvi.lk

b. தரப்பட்டுள்ள இலங்கைப் புறஉருவப்படத்தில் குறிக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை படத்தில் எழுதுக.

i. பருத்தித்துறை முனை
ii. தேவேந்திர முனை
iii. கம்பஹா
iv. திருகோணமலை
v. புத்தளம் கடல்நீரேரி
vi. அநுராதபுரம்




(6x1 =6புள்ளிகள்)

02. i. புவிச்சுழற்சி என்றால் என்ன?
ii. புவி ஒரு முழுமையான கோளம் அல்ல என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக.
iii. புவியின் ஏழு கண்டங்களில் ஐந்து கண்டங்களைத் தருக.

(3+4+5=12புள்ளிகள்)

03.
i. அகலக்கோடு என்றால் என்ன?
ii. இலங்கையில் உள்ள தீவுகள் நான்கு தருக.
iii. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஐந்து தீவுகளைத் தருக.

(3+4+5=12புள்ளிகள்)

04.
i. தென்னாசிய நாடுகள் மூன்று தருக.
ii. இலங்கையில் மருத்துவ சுகாதாரத்துறை வசதிகள் மேம்பாடடைவதால் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
iii. இலங்கையில் காணப்படும் கலாசார மரபுரிமைகள் ஐந்து தருக.

(3+4+5=12புள்ளிகள்)



kalvi.lk

05. i. மத்திய மலைநாட்டில் காணப்படும் மலைத்தொடர்கள் மூன்று தருக.

ii. மத்திய மலைநாட்டில் காணப்படும் மேட்டுநிலங்கள் நான்கு தருக.

iii. இலங்கையில் ஈரவலயத்தில் காணப்படும் நதிகள் ஐந்து தருக.

(3+4+5=12புள்ளிகள்)

06. i. இலங்கையில் நிகழும் இயற்கை அனர்த்தங்கள் மூன்று தருக.

ii. இலங்கையில் வரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

iii. இலங்கையில் வரட்சியினால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் ஐந்து தருக.

(3+4+5=12புள்ளிகள்)

07. i. சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக.

ii. அதிக மழை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் நான்கு தருக.

iii. இடி மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் ஐந்து தருக.

(3+4+5=12புள்ளிகள்)

LMDMUnit Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457